

பூங்காவனம்

ஆகும் எனப் பந்தள அரண்மனை வைத்தியன் கூறினான். மணிகண்டன் புலிப்பாலின் பொருட்டுக் கானகம் சென்றான். மகிஷிமர்த்தனம் நிகழ்ந்தது. தேவர்கள் மகிழ்ந்தனர். அவர்களே புலிக்கூட்டமாக மாறிப் பந்தளம் வந்தனர். அமைச்சரின் துர்ப் போதனையால் வந்த பொய்யான தலைவலி என்பது அனைவர்க்கும் விளங்கிற்று. ஐயப்பன் மன்னித்தான்.

ஐயப்பனால் புலிப்பாலும் அருள முடியும். பாலுக்கு அழுத பாலகனுக்காகப் பாற்கடல் ஈந்த பிரான் அவன் தந்தை. அவனால் இயலாதது எதுவுமில்லை.

பொய்மைகளில் பூத்த தலைவலிகள் பல உடையது உலகம். அத்தலைவலிகளுக்கு மருந்தில்லை. தர்மத்தை அலைக்கழிக்கவும், அகற்றவும் நாடகமாடிடும் தலைவலிகள் அவை. புலிப்பால் ஒரு சாக்குப் போக்குத்தான். எனினும் அதனை வரவழைக்கும் ஆற்றல் உடையது இறைமை. மகிஷி சம்ஹாரத்தின் மகத்துவத்தின் மீது ஆரோகணிக்கும் தர்ம சாஸ்தா சிறுமைகளை மன்னிப்பதில் அதிசயம் இல்லை.

## பூங்காவனம்

ஸ்ரீ ஐயப்பனின் சாந்நித்தியம் நிரம்பியுள்ள 18 மலைகளும் ஐயப்பன் பூங்காவனம் என வழங்கப்படும். அம்மலைகள் வருமாறு: 1. தலைப்பாறை மலை 2. காளகட்டி மலை 3. புதுச்சேரிக்கானம் 4. கரிமலை 5. இஞ்சிப்பாறைமலை 6. நிலக்கல் மலை 7. வட்ட மலை 8. ஸ்ரீ பாதம் மலை 9. தேவர் மலை 10. சுந்தர மலை 11. நாக மலை 12. நீலி மலை 13. சபரி மலை 14. மயிலாடும் மலை 15. மாதங்க மலை 16. சிற்றம்பலமேடு 17. பொன்னம்பல மேடு18. கவுண்டன் மலை.

பதினெட்டுப் படிகளையும் இம்மலைகளின் பிரதிநிதிகளாகக் கருதுவதுண்டு. இக்கானகத்தில் சபரிகிரீசனே இலட்சியம். எனவே இது ஐயப்பனின் பூங்காவனம். எனவே தெய்வீகச் சூழல் காட்டில் விகசித்து நிற்கிறது. சரணம் நாவிலும், நம் பிக்கை மனத்திலுமாக யாத்திரை புரியும் ஐயப்பன்மார்களால் இத் தெய்வீகம் பூரணச் செழுமை பெறுகிறது.

## பூதநாத கீதை

தம்மை மணிகண்டனாக வளர்த்த பந்தள ராஜனுக்குத் தர்ம சாஸ்தாவால் உபதேசிக்கப்பட்ட ஞானமே பூதநாத கீதை.

## பூதநாதோபாக்கியானம்

பிரம்மாண்ட புராணத்தின் ஒரு பகுதி. ஸ்ரீ ஐயப்பன் வரலாறு இதில் உள்ளது. அரிகர புத்திரனாக அவதரித்ததும், மகிஷியை மர்தனம் செய்ததும், சபரிக்கு மோட்சம் அருளியதும், அவள் நினைவில் தோன்றிய அம்மலை மீது வழிபடுதெய்வம் ஆனதும் இப் புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

## பூர்ணா-புஷ்கலா சமேதர்

தர்ம சாஸ்தாவில் கிரஹஸ்த ஒளி ஒளிர்ந்து நிற்கையில் அவர் பூர்ணா-புஷ்கலா சமேதராக விளங்குகிறார். ஆரியங்காவு ஆலயம் தர்மசாஸ்தாவின் கிரஹஸ்த ஒளி ததும்பும் இடமாகும். பூர்ண-புஷ்கலா குறித்த கன்ன பரம்பரைக் கதை ஒன்று உள்ளது. கதை வருமாறு: நேபாள மன்னன் பூபாலன் தன் மூப்பினை வெல்லக் கருதி ஒரு கன்னியைக் காளிக்கு அர்ப்ப ணிக்க முனைந்தான். சிவபக்தி மிக்க அக்கன்னி வேண்டவே சாஸ்தா அவளைக் காத்தருளினார். அரசன் திருந்தினான். அக்கன்னி பூர்ணாவையும், அரசன் மகள் புஷ்கலாவையும் சாஸ்தா முறைப்படி மணந்தருளினார். மதுரை சார்ந்த சௌராஷ்டிரர் தமது மகள் புஷ்கலா தேவியை சாஸ்தா ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சியை ஆண்டுதோறும் ஆரியங்காவு ஆலயத்தில் விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

## பூஜை

சபரிமலை ஐயப்பன் சந்நிதியில் நிகழும் நித்ய பூஜைகள் வருமாறு: 1. உஷபூஜை எனும் அதிகாலை நேர பூஜை 2. உச்சி பூஜை எனும் நண்பகல் நேர பூஜை 3. அத்தாள பூஜை எனும் இரவு நேர பூஜை. அதிகாலை 4.00 மணிக்கு நடைதிறக்கும். உடனேயே தந்திரி அபிஷேகம் செய்வார்; அதன்பின் கணபதி ஹோமம் நிகழும். உஷபூஜை காலை 7.30-க்கு நிகழும். நைவேத்தியம், மற்றும் பிரஸன்ன பூஜைக்குப் பிறகு தீபாராதனை நிகழும். அதன்பின் 25 கலசங்களில் நிரப்பிய நீரால் கலசாபிஷேகம் நடைபெறும். அதன் பின்பு நைவேத்யம். பின்பு மாலை 4.00 மணிக்கு நடை திறப்பு. சந்தி நேரம் தீபாராதனை. தொடர்ந்து புஷ்பாபிஷேகம். அத்தாள பூஜை இரவு 10.00 மணிக்குப் பின்பு நிகழும். நைவேத்யத்துக்குப் பின்பு நடையடைத்து கருவறை சுத்தம் செய்யப்படும்; அடைக்கப்படும். இறுதியில் 'ஹரிவராஸனம்' பாடப்

சஞ்சலம் அழிப்பவனே... சரணம் ஐயப்பா சங்கடம் தீர்ப்பவனே... சரணம் ஐயப்பா